# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## முதலாம் தவணைப் பரீட்சை - 2022
# Conducted by Field Work Centre, Thondaimanaru.
# 1st Term Examination - 2022

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| பொருளியல் Economics | Three Hours / Gr -12 (2023) | 21 | T | I,II |

**அறிவுறுத்தல்கள் :–**

- **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- **விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது சுட்டெண்ணை எழுதுக.**
- **விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.**
- **1 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்தெடுத்து, அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய விடைத்தாளில் புள்ளடி (X) இடுவதன் மூலம் காட்டுக.**

## பகுதி – I

01. பின்வருவனவற்றுள் எது நியமக் கூற்றாக அமையும்?
   1) பொருட்களின் விலை அதிகரிக்குமாயின் மக்களின் வாழ்க்கைத்தரம் வீழ்ச்சியடையும்.
   2) பொருளியலாளர்கள் நிலம், உழைப்பு, மூலதனம் என்பவற்றை உற்பத்தி வளங்களாக கருதுகின்றனர்.
   3) இலங்கையில் பால்மாவிலை வீழ்ச்சியடைந்துள்ளது.
   4) நாட்டில் பொருட்களின் விலை அதிகரிப்பும் அரசியல் உறுதியற்ற தன்மையும் பொருளாதார வளர்ச்சிக்குப் பொருத்தமானதன்று.
   5) பொருகள் சேவைகளின் விலை மாற்றத்துடன் நிரம்பல் தொகையானது நேர்க்கணிய தொடர்பினைக் கொண்டதாகும். (……….)

02. பொருளாதாரமொன்றில் அரசாங்கத்தின் பங்களிப்பு மிகவும் குறைவாக காணப்படுவது.
   1) கட்டளைப் பொருளாதாரத்திலாகும்.
   2) சந்தைப் பொருளாதாரத்திலாகும்.
   3) கலப்புப் பொருளாதாரத்திலாகும்.
   4) மரபு ரீதியான பொருளாதாரத்திலாகும். (……….)


03. பின்வருவனவற்றில் எது சந்தை முறைமையை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரம் ஒன்றின் பண்பல்லாதது?.
   1) விலை முறைமை அடிப்படையில் செயற்படுதல்.
   2) தனியார் சொத்துரிமை காணப்படுதல்.
   3) போட்டித்தன்மை காணப்படுதல்
   4) சமூக நீதி மற்றும் சமூக நலன் பேணப்படுதல்
   5) இலாபநோக்கு அடிப்படையில் இயங்குதல் (……….)

04. சகல பொருளாதார நடவடிக்கைகளிலும் வேறுபட்ட தொழிநுட்ப முறைகள் பயன்படுத்தப்படுமாயின் பின்வருவனவற்றுள் எது உண்மையாகும்?
1) உற்பத்தி இயல்தகவு வளையி ஓர் நேர்கோடாகும்.
2) உற்பத்திக்குக் குழிவான சாத்திய வளையி காணப்படும்.
3) வளங்கள் அருமையற்றதாகக் காணப்படும்.
4) சிறப்புத் தேர்ச்சி ஏற்படுவதற்கான சாத்தியமில்லை.
5) சாத்திய வளைகோட்டில் நிலையான அமையச் செலவு காணப்படும். (……….)

05. தொழிற்படையின் வசமுள்ள அறிவும் திறன்களும் நிபுணத்துவமும்.
1) சமூக மூலதனமாகும். 2) மனித மூலதனமாகும்
3) தொழிற்படுமூலதனமாகும் 4) அறிவுமூலதனமாகும் 5) சுழலும் மூலதனமாகும்
(……….)

06. உற்பத்தி இயல்கதவு வளையிக்கு உள்ளே இயங்கும் பொருளாதார மொன்று தொடர்பாக பின்வருவனவற்றுள் எது சரியானதாகும்?
1) அது ஒரு சமூக சந்தைப் பொருளாதாரமாக இருத்தலாகும்.
2) அது ஒரு கட்டளைப் பொருளாதாரமாக இருத்தலாகும்.
3) நாட்டின் வளங்கள் திறனற்ற வளப்பயன்பாடாக இருக்கும்
4) அதன் வளங்கள் பூரண வேலை வாய்ப்பில் இருக்கும்
5) அதன் வளங்கள் உச்ச வினைத்திறனான பயன்பாட்டில் இருக்கும் (……….)


07. பொருளாதாரம் ஒன்றினது உற்பத்தி இயல்தகவு வளையியைப் பின்வரும் வரைபடம் காட்டுகின்றது.




வரைபில் விவசாய உற்பத்தியில் வீழ்ச்சி ஏற்படாத வகையில் கைத்தொழில் உற்பத்தி அதிகரிப்பது.
1) A யிலிருந்து உற்பத்திப்புள்ளி B புள்ளிக்கு நகர்வது.
2) A யிலிருந்து உற்பத்திப்புள்ளி D புள்ளிக்கு நகர்வது.
3) A புள்ளியிலேயே உற்பத்தி காணப்படுதல்.
4) B புள்ளியிலிருந்து A புள்ளிக்கு உற்பத்தி நகர்தல்.
5) D புள்ளியிலிருந்து A புள்ளிக்கு உற்பத்தி நகர்தல். (……….)

08. பின்வருவனவற்றுள் எவை பொருளாதாரப் பண்டமொன்றின் இயல்புகளில் சரியானதாக அமையும்
A- ஒப்பீட்டு ரீதியில் அருமையாகக் காணப்படுதல்.
B- குறைந்து செல்லும் எல்லைச் செலவொன்றைக் கொண்டிருத்தல்
C- அமையச் செலவொன்று காணப்படுதல்
D- உற்பத்தி செலவொன்றைக் கொண்டிருத்தல்
1) A, B மற்றும்C 2) A, C மற்றும் D 3) B,C மற்றும் D
4) A, D மற்றும் B 5) A மற்றும் C ஆனால் D அன்று (……….)

09. பொருளாதாரத்தில் அமையச்செலவின்றி உற்பத்தியினை அதிகரிக்கக் கூடிய சந்தர்ப்பங்களில் ஒன்று பின்வருவனவற்றுள் எதுவாகும்.




1) உற்பத்திப்புள்ளி B யிலிருந்து C புள்ளிக்கு நகருதல்.
2) உற்பத்திப்புள்ளி B யிலிருந்து A புள்ளிக்கு நகருதல்
3) உற்பத்திப்புள்ளி E யிலிருந்து D புள்ளிக்கு நகருதல்
4) உற்பத்திப்புள்ளி A யிலிருந்து C புள்ளிக்கு நகருதல்
5) உற்பத்திப்புள்ளி E யிலிருந்து C புள்ளிக்கு நகருதல் (……….)

10. உற்பத்தி சாத்திய வளையி ஒர்நேர்கோடாக அமையுமாயின்
1) அமையச் செலவு தோன்றாது
2) பூச்சிய அமையச் செலவு தோன்றும்
3) இருபண்ட உற்பத்திகளிலும் சமனற்ற தொழிநுட்பம் காணப்படும்
4) அமையச் செலவு மாற்றமின்றியிருக்கும்
5) அதிகரிக்கும் அமையச் செலவு விதி காணப்படும் (……….)

11. கேள்வி வளையி வலது புறம் நகர்வதற்குப் பொருத்தமான காரணி அல்லாதது?
1) நுகர்வோர் வருமானம் அதிகரித்தல்
2) பதிலீட்டுப் பொருளின் விலை அதிகரிப்பு
3) நுகர்வோர் எண்ணிக்கை குறைதல்
4) சுவையின் சாதகமான மாற்றம்
5) எதிர்காலத்தில் பொருளின் விலை அதிகரிக்கும் என எதிர்பார்ததல் (……….)

12. கேள்வித் தொகை மாற்றம் என்பது
1) பொருளின் விலை மாறாத போது வருமான அதிகரிப்பினால் ஏற்படுவது
2) பொருளின் விலை மாறாத போது பொருளின் சுவை மாற்றததால் ஏற்படுவது
3) ஏனைய காரணிகள் மாறாத போது பொருளின் விலை அதிகரிப்பினால் ஏற்படுவது
4) ஏனைய காரணிகள் மாறாத போது பொருளின் விலை மாற்றத்தினால் கேள்வித் தொகையில் மாற்றம் ஏற்படுவது
5) பொருளின் விலை மாறாத போது அதன் கேள்வித் தொகையில் மாற்றம் ஏற்படுவது. (……….)

13. சந்தையில் விற்பனையாகும் பண்டமொன்றினது கேள்விச் சமன்பாடு Qdx=200-5P எனத்தரப்படுகின்றது பொருளின் விலை 10ரூபாவில் விலைக்கேள்வி நெகிழ்ச்சி யாது?
1) -0.11 2) -0.33 3) -0.50 4) 0.33 5) -0.75 (……….)


14. நிறுவனம் ஒன்று தனது விற்பனைப் பொருளின் விலையினை 10சதவீதத்தினால் அதிகரித்தமையால் அதன் மொத்த வருமானம் 15சதவீதம் வீழ்ச்சியடைந்ததாயின் நிறுவனத்தின் உற்பத்திப் பொருளின் கேள்வியானது.
1) நெகிழ்வற்றதாய் அமைதல் வேண்டும்.
2) நெகிழ்ச்சியுள்ளதாய் அமைதல் வேண்டும்
3) அலகு நெகிழ்ச்சியாய் அமைதல் வேண்டும்.
4) பூரண நெகிழ்ச்சியுள்ளதாய் அமைதல் வேண்டும்.
5) பூரண நெகிழ்வற்றதாய் அமைதல் வேண்டும். (……….)

15. நிரம்பலாளர் ஒருவர் தனது விற்பனைப் பொருளின் விலையினை 10%தினால் அதிகரிப்பதன் மூலம் வருவாயையும் 10%தினால் அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கின்றார் இக் குறிக்கோளை அடைவதற்கு மிகப் பொருத்தமாக அமைவது
1) விலைக்கேள்வி நெகிழ்ச்சிக் குணகம் ஒன்றைவிடக் குறைவாக இருக்க வேண்டும்.
2) விலைக்கேள்வி நெகிழ்ச்சிக் குணகம் ஒன்றைவிடக் கூடுதலாக அமைதல் வேண்டும்.
3) விலைக்கேள்வி நெகிழ்ச்சிக் குணகம் ஒன்றிற்குச் சமனாக இருத்தல் வேண்டும்.
4) விலைக்கேள்வி நெகிழ்ச்சிக் குணகம் பூச்சியமாக இருத்தல் வேண்டும்.
5) விலை நிரம்பல் நெகிழ்ச்சிக் குணகம் பூச்சியமாக இருத்தல் வேண்டும். (……….)

16. நிரம்பல் வளையி கீழிருந்து மேலாகச் சரிந்து செல்வதற்கு மிகப் பொருத்தமான காரணம்.
1) வருமான விளைவு நேர்க்கணியமாக விருத்தல் ஆகும்.
2) பதிலீட்டு விளைவு எதிர்க்கணியமாக இருத்தல் ஆகும்.
3) எல்லைப் பதிலீட்டு விகிதம் காரணமாகும்.
4) குறைந்து செல்லும் எல்லைப்பயன் விதி காரணமாகும்.
5) அதிகரித்துச் செல்லும் எல்லைச் செலவு காரணமாகும். (……….)

17. நெல் உற்பத்தியின் நிரம்பல் வளையியை இடதுபுறம் நகர்வடையச் செய்யும் காரணி பின்வருவனவற்றுள் எது?.
1) நுகர்வோர் வருமானம் அதிகரித்தல்.
2) புதிய உற்பத்தித் தொழிநுட்பம் அறிமுகப்படுத்தப்படல்.
3) மிதமான மழைவீழ்ச்சி காணப்படுதல்
4) உரப்பாவனை கைவிடப்பட்டு மரபுரீதியான உற்பத்தி முறைமைக்கு மாற்றமடைதல்
5) நெல்லுற்பத்தியாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தல் (……….)

18. பொருள் ஒன்றிற்கான நிரம்பல் வளையி கீழே தரப்படுகின்றது




வரைபில் A,B புள்ளிகளுக்கிடையிலான வில் நெகிழ்ச்சிக் குணகம் யாது?
1) 1.5 2) 1.8 3) - 0.5 4) 2.0 5) 0.55

19. நிரம்பல் வளையியொன்றின் வலதுபுற நகர்வின் போது பின்வருவனவற்றுள் எது நிலையானதாகக் கொள்ளப்படுகின்றது
1) நுகர்வோர் வருமானம் 2) குறித்த பொருளின் விலை
3) விலை தவிர்த்த ஏனைய காரணிகள் 4) தொழில்நுட்பம்
5) மூலப்பொருட்களின் விலைகள் அதிகரித்தல்

20. நிரம்பல் நெகிழ்சிச் சூத்திரத்தில் பயன்படுத்தப்படும் $\frac{\Delta QS}{\Delta P}$ என்பது
1) கேள்விக்கோட்டின் புள்ளியைக் குறிக்கின்றது
2) ஆரம்ப மற்றும் புதிய நிரம்பல் விலைகளைக் குறிக்கின்றது.
3) நிரம்பல் வளைகோட்டின் தலைகீழ்படுத்திய சரிவாகும்.
4) ஆரம்ப விலைக்கும் ஆரம்ப தொகைக்குமிடையிலான தொடர்பாகும்.
5) கேள்வி வளைகோடு கிடையச்சினை வெட்டும் புள்ளியாகும்.

(20×1=20 புள்ளிகள்)

## பகுதி II

**அறிவுறுத்தல்கள் :-**

- **உப பிரிவுகள் "அ" "ஆ" ஆகிய ஒவ்வொன்றிலும் இருந்து இரண்டு வினாக்களைத் தெரிவு செய்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.**

### உப பிரிவு 'அ'

*01.* i) சகல சமூகங்களும் எப்போதும் முகங்கொடுக்கின்ற அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகள் எவை? *(3 புள்ளி)*

ii) சந்தைப் பொருளாதாரமொன்றில் வளங்கள் எவ்வாறு ஒதுக்கீடு செய்யப்படுகின்றன? *(4 புள்ளி)*

iii) பொருளாதாரப்பண்டம், பொருளாதாரமல்லாப் பண்டம் ஆகியவற்றை பொருத்தமான உதாரணம் தந்து விளக்குக? *(6 புள்ளி)*

iv) பொருளாதார வளங்கள் என்றால் என்ன? அவற்றை எவ்வாறு வகைப்படுத்துவீர்? *(7 புள்ளி)*

*02.* i) "என்ன பொருளை எந்தளவு" உற்பத்தி செய்தல் எனும் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சனைக்கு ஒவ்வோர் பொருளாதார முறைமைகளும் எவ்வாறு தீர்வு காணுகின்றன? *(3 புள்ளி)*

ii) அதிகரிக்கும் அமையச்செலவு விதியினை ஒர் உற்பத்தி சாத்திய வளையியின் உதவியுடன் விளக்குக? (6 புள்ளி)

iii) கணணி மற்றும் கைத்தொலைபேசி என்பவற்றுக்கான அதிகரிக்கும் அமையச் செலவுடைய உற்பத்தி சாத்திய வளையி ஒன்றை வரைக? *(2 புள்ளி)*

அவ்வளையியைப் பயன்படுத்தி பின்வரும் நிகழ்வுகளைக் காட்டுக

1) பொருளாதார வளர்ச்சியொன்று ஏற்படுதல்
2) சமூகம் அதிகளவில் கைத்தொலைபேசியையும் குறைந்தளவு கணணியையும் பெறத் தீர்மானித்தல்
3) கைத்தொலைபேசி உற்பத்தியில் புதிய தொழிநுட்பம் பயன்படுத்தப்படுதல்
4) பொருளாதாரத்தில் முன்னரைவிட வேலைவாய்ப்பு அதிகரித்தல்

(ஒவ்வொன்றிக்கும் ஒரு புள்ளி வீதம் 4 புள்ளிகள்)

iv) உற்பத்தி சாத்திய வளையி என்பதனை வரையறுக்குக? அவ்வளையியை வரைவதில் கையாளப்படும் எடுகோள்கள் எவை? *(5 புள்ளி)*

*03.* i) பொருளியலில் "அருமை" "மாற்றுபயோகம்" எனும் பதங்களை விளக்குக? *(4 புள்ளி)*

ii) பொருளியலில் "அருமை" "தெரிவு" "மாற்றுபயோகம்" என்பவை அமையச் செலவுடன் தொடர்புபட்ட எண்ணக்கருக்களா? விளக்குக? *(6 புள்ளி)*

iii) சந்தைப் பொருளாதாரமொன்றின் பண்புகளையும் கட்டளைப் பொருளாதார மொன்றின் பண்புகளையும் வேறுபடுத்துக? *(5 புள்ளி)*

iv) சந்தைப் பொருளாதாரமொன்றில் விலையின் தொழிற்பாடுகள் எவை? *(3 புள்ளி)*

v) பொருளாதார வினைத்திறன் என்பது கொண்டிருக்கூடிய இரு நிபந்தனைகளும் எவை? *(2 புள்ளி)*

## உப பிரிவு 'ஆ'

- **இப்பிரிவிலிருந்து இரண்டு வினாக்களைத் தெரிவு செய்க.**

*04.* i) பெளியலில் "தேவைகள்" "விருப்பங்கள்" என்பவற்றை வேறுபடுத்துக? *(4 புள்ளி)*

ii) கேள்வி எனும் பதத்தினை வரைவிலக்கணப்படுத்துக? பயன்படு கேள்வி கொண்டிருக்கக் கூடிய மூன்று முக்கிய விடயங்களும் எவை? *(6 புள்ளி)*

iii) சாதாரண பண்டமொன்றின் கேள்வி வளையி மேலிருந்து கீழாகச் சரிந்து செல்வதற்கான காரணங்களை விளக்குக? *(4 புள்ளி)*

iv) தேங்காய் ஒன்றின் விலை *50* ரூபாவில் *300* அலகுகள் நுகர்படுகின்றன. பொருளின் விலை *60* ரூபாவாக அதிகரித்த போது *12000* ரூபாவை உற்பத்தியாளன் வருமானமாகப் பெறுகின்றான். *50* ரூபா விலையில் பொருளின் விலைக்கேள்வி நெகிழ்ச்சி யாது? *(2 புள்ளி)*

v) போட்டிச் சந்தையொன்றில் பண்டமொன்றிற்கான கேள்வி சார்பு கீழே தரப்படுகின்றது.

$$Qdx = 6000 - 100P$$

i) பண்டத்தின் ஆகக்கூடிய கேள்வி விலையையும் ஆகக்கூடிய கேள்வித்தொகையையும் காண்க? *(2 புள்ளி)*

ii) சந்தையில் *2000* அலகுகளைக் கொள்வனவு செய்வதற்கு நுகர்வோர் செலுத்தும் விலையாதாகவிருக்கும்? *(2 புள்ளி)*

05. i) "நிரம்பல் தொகை மாற்றம்" என்பதனை வரையறுக்கும் போது கையாளப்படுகின்ற எடுகோள்கள் யாவை? *(4 புள்ளி)*

ii) தோடம்பழம் ஒன்றினது நிரம்பல் வளையி வலப்புறமாக நகர்வதற்குரிய சந்தர்ப்பங்களை பட்டியற்படுத்துக? *(5 புள்ளி)*

iii) நிறை போட்டிச் சந்தையொன்றில் விற்கப்படும் பண்டமொன்றின் விலை *30* ரூபாவில் *100* அலகுகளும், *50* ரூபாவில் *300* அலகுகளும் நிரம்பல் செய்யப்படுகின்றன

அ) பொருளின் நிரம்பல் சமன்பாட்டைத் தருக? *(2 புள்ளி)*

ஆ) நிரம்பல் சமன்பாட்டினைப் பிரதிபலிக்கும் வளையியொன்றினை வரைக? *(2 புள்ளி)*

iv) பண்டமொன்றிற்கான விலை நிரம்பல் நெகிழ்ச்சிக் குணகம் *1.5* என்பதாக அமைந்தது இந் நெகிழ்ச்சியை எவ்வாறு வரையறுப்பீர்? வரைபடம் ஒன்றின் மூலம் விளக்குக? *(5புள்ளி)*

v) நிரம்பல் விதியானது பொருளின் விலைக்கும் நிரம்பல் தொகைக்குமிடையே நேர்க்கணியத் தொடர்பினை விளக்குவற்குரிய காரணங்கள் எவை? *(2 புள்ளி)*

*06.* i) விலை நிரம்பல் நெகிழ்ச்சி என்பதனை வரைவிலக்கணப்படுத்தி அது எவ்வாறு கணிப்பிடப்படுகின்றது என்பதனை உதாரணத்துடன் விளக்குக. *(5 புள்ளி)*

ii) நிரம்பல் வளைகோட்டின் புள்ளிவழியே பொருளின் விலை அதிகரிக்கும் போது நெகிழ்ச்சிக்குணகம் குறைந்து செல்லும் சந்தர்ப்பமொன்றினை வரைபின் மூலம் விளக்குக. *(5 புள்ளி)*

iii) "நிரம்பல் மாற்றம்" "நிரம்பல் தொகை மாற்றம்" ஆகியவற்றை வேறுபடுத்துக. *(6 புள்ளி)*

iv) போட்டிச்சந்யொன்றில் விற்பனை செய்யப்படும் பண்டமொன்றின் நிரம்பல் சார்பு கீழே தரப்படுகின்றது.

$$QS_x = -200 + 10P$$

நிரம்பல் வளைகோட்டை வரைக? வளையி நெகிழ்ச்சிவாய்ந்ததா / நெகிழ்ச்சியற்றதா எனக் குறிப்பிடுக. *(4 புள்ளி)*